www.tamilarangam.net

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்
PEOPLE'S LIBERATION ORGANIZATION OF THAMILEELAM

# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் மத்திய குழு அறிக்கை

கடந்த பெப்பிரவரி 19 முதல் 24ம் திகதிவரை யாழ்ப்பாணம் கந்தரோடையில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் முதலாவது மாநாடு நடைபெற்றது. அவ்வேளை அம்மாநாட்டில் தமிழீழத்தின் வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட அனைத்துப் பகுதி பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாட்டின் நோக்கங்கள் பின்வருமாறு இருந்தன.

1. தோழர் முகுந்தன் கடைப்பிடித்து வரும் ஏதேச்சதிகார அராஜக நடவடிக்கைகளை நிராகரித்து உட்கட்சி ஜனநாயகத்தை நிலை நாட்டுவது.
2. தோழர் முகுந்தனின் தலைமையில் கழகத்தில் நடைபெற்ற கொலைகளை விசாரணை செய்வதற்கும் அதன் மீது நடவடிக்கைகள் எடுப்பதற்குமான அமைப்புக்களை ஏற்படுத்தல்.
3. கழகத்தை சீர்குலையும் பாதைக்கு கொண்டு சென்ற தோழர் முகுந்தனின் மூலோபாயமற்ற அரசியல், இராணுவப் போக்குகளைக் கண்டிப்பதும் சரியான அரசியல், இராணுவ மூலோபாயத்தை வகுப்பதற்கான அடிப்படையை உருவாக்குதலும்.
4. இம் மாநாட்டின் தீர்மானங்களில் மிகவும் முக்கியமானது தோழர் முகுந்தனால் இரகசியமாக உருவாக்கப்பட்டு உட்கொலைகளிற்கும், கொள்ளைகளுக்கும் பயன்படுத்தப்பட்ட உளவுப்படையினரைப் பற்றி ஆராய்வதும் அவர்களுக்கு சரியான தீர்வு வழங்குவதும் ஆகும்

மேலும் தமிழீழத்தில் நடைபெற்ற இம்மாநாட்டில் கலந்து கொள்ள வாய்ப்பில்லாமல் தமிழீழத்திற்கு வெளியே இங்கு தங்கியிருந்த கழகத் தோழர்களின் மாநாட்டை நடத்துவதாகவும் முடிவு செய்யப்பட்டது. தமிழீழத்தில் நடைபெற்ற இந்த மாநாடு தெரிவு செய்த தலைமையை, ஆட்சிக்குழுவுடன் தமிழீழத்திற்கு வெளியே இங்கு நடைபெற இருக்கும் மாநாடு தெரிவு செய்யும் ஆட்சிக்குழு இணைந்து கழகத்திற்கான புதிய தலைமையை உருவாக்குவது என்று முடிவு செய்யப்பட்டது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழீழத்து மாநாட்டை முறியடிக்கச் தோழர் முகுந்தனால் எடுக்கப்பட்ட சதிமுயற்சிகள் அனைத்தையும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தமிழீழ மாநாடு முறியடித்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பூரண வெற்றியுடன் நடைபெற்ற தள மாநாட்டை மத்திய குழுவும் வெளிநாட்டுக் கிளைகளும் ஒருமனதாக ஏற்றுக்கொண்டமையால் தோழர் முகுந்தன் வேறுவழியின்றி ஏற்றுக் கொண்டார். தமிழீழத்து மாநாட்டின் நோக்கங்களிற்கு விரோதமாக நடைமுறையில் செயல்பட்டு வந்த தோழர் முகுந்தன் உளவுப்படையை மீண்டும் வலுப்படுத்தி தனது ஆதரவாளர்களைக் கொண்டு சர்வாதிகார முறையில் தமிழீழத்திற்கு வெளியே இங்கு நடைபெற இருந்த மாநாட்டை தனக்கு சாதகமாக நடத்த முனைந்தார்.

இந்த மாநாடு முற்றிலும் ஜனநாயக முறையில் நடைபெறும் என உறுதிப்படுத்த முனைந்து தற்போது இங்கிருக்கும் தள கழக செயற்குழுவையும், பெரும்பான்மை மத்திய குழுவினரையும் தனது கீழ்த்தரமான திட்டங்களிற்கு எதிராக இருப்பதால் தோழர் முகுந்தன் கொலை செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளார். தோழர் முகுந்தன் இதற்கு முன்னர் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் வளர்ச்சிக்காக தன் வாழ்நாள் முழுவதும் உழைத்துள்ள தோழர் சந்ததியாரை (வசந்தன்) கொலை செய்ததை அனைவரும் அறிந்ததே. இது உட்பட 38 கொலைகளிற்கு தோழர் முகுந்தன் பொறுப்பேற்றுக் கொண்டார். இந்நிலையில் யூலை 19ம் திகதி நடைபெறவிருந்த மாநாட்டில் கலந்து கொள்வது தோழர் முகுந்தனின் அராஜகத்திற்கு துணை போவதாகவே அமையும் என்பதாலும் தமிழ் நாட்டில் வன்முறைச் சம்பவங்கள் நடைபெறுவதை தவிர்ப்பதற்காகவும் நாம் மாநாடு ஏற்பாடுகளிலிருந்து விலகிக் கொண்டதுடன் ஜனநாயக ரீதியில் மாநாடு ஒன்றை நடத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். மேலும் இங்கு நடைபெறும் மாநாட்டிற்கு பேராளர்களாக தெரிவு செய்யப்பட்ட 187 பேராளர்களினுள் 155 பேராளர்கள் மாநாட்டு ஏற்பாடுகளை நிராகரித்து வெளியேறியுள்ளார்கள். தோழர் முகுந்தனோடு எஞ்சியுள்ள 32 பேராளர்களில் பெரும்பான்மையோர் தோழர் முகுந்தனின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் உளவுப்படை உறுப்பினர்களே ஆவர்கள். இவர்கள் கழகத் தோழர்கள் மத்தியிலிருந்து ஜனநாயக ரீதியில் பேராளர்களாக தெரிவு செய்யப்படாமல் தோழர் முகுந்தனின் நேரடி சிபார்சின் பேரில் மாநாட்டில் பேராளர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களே ஆவார்கள். அத்தோடு தோழர் முகுந்தனோடு எஞ்சியுள்ள 5 மத்திய குழு உறுப்பினர்களில் ஒருவரும் உளவுப் பிரிவின் தலைவருமான தோழர் கந்தசாமியும் இப்பேராளர்களில் ஒருவராவர்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தள செயற்குழுவும் கழக மத்திய குழுவின் பெரும்பான்மையினராகிய நாம் பின் தள மாநாட்டை ஜனநாயக ரீதியில் நடத்துவதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் தோழர் முகுந்தன் தனது உளவுப்பிரிவின் ஆதரவுடன் போலித்தனமான மாநாடு ஒன்றை நடாத்தி தன்னை மீண்டும் செயலதிபராக நிலை நிறுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகின்றது.

தமிழீழத்தில் நடைபெற்ற தளமாநாட்டுத் தீர்மானங்களின்படி இங்கும் மாநாடு நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. மேற்படி தீர்மானங்களின்படி தளச் செயற்குழுவின் முன்னிலையிலேயே மாநாடு நடைபெறல் வேண்டும். அத்தோடு இம்மாநாட்டின் பேராளர்களாக தோழர்கள் மத்தியில் இருந்து ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட தோழர்களே பங்கு பெறல் அவசியம். இவ்விரண்டு விதிகளிற்கும் மாறாக நடைபெறுகின்ற எந்தவொரு மாநாடும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் மாநாடாக அமைய இயலாது. இவ் மேற்படி விதிகளிற்கமைய தளச்செயற்குழுவும் பெரும்பான்மை மத்திய குழு உறுப்பினர்களாகிய 9 அங்கத்தவர்களும் சேர்ந்து கழக மாநாட்டை நடத்தத் தீர்மானித்துள்ளோம். இம்மாநாட்டில் கழகம் பற்றிய அனைத்துப் பிரச்சனைகளும் ஆராயப்பட்டு கழக மத்தியத்துவம் வாய்ந்த கூட்டுத் தலைமை உருவாக்கப்படும். அத்தோடு கழகத்தின் விமர்சனம் சுயவிமர்சனம் மற்றும் அரசியல் இராணுவ மூலோபாயங்கள் விஞ்ஞான பூர்வமாமான விவாதங்களினூடாக தீர்மானிக்கப்படும்.

மேலும் கழகத்தின் தோழர்களினதும் அனைத்து அங்கங்களினதும் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாக்கப்பட்ட மத்திய குழு உறுப்பினர்களாகிய தோழர்கள் முகுந்தன், கண்ணன், வாசுதேவா, கந்தசாமி, மாணிக்கம்தாசன் ஆகியோர் பெரும்பான்மை மத்திய குழு உறுப்பினர்களின் முடிவின்படி தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்படுகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடைபெற இருக்கும் கழக மாநாட்டில் இவர்கள் சுதந்திரமான முறையில் கலந்து கொண்டு தங்கள் மீதான குற்றச்சாட்டுதல்களுக்கும் விமர்சனங்களிற்கும் விளக்கமளிப்பதற்கும் சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப் படும். அரசு, அனைத்து விடுதலை அமைப்புக்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் ஏனைய தொடர்புகள் அனைத்தையும் கழக மத்திய குழுவினிடம் ஏற்படுத்திக்கொள்ளும் படி வேண்டுகின்றோம் மத்திய குழுவிடம் ஏற்படுத்தப் படும் அல்லது புதிப்பிக்கப்படும் தொடர்புகளிற்கு மட்டுமே தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் பொறுப்பாகும். ஏனைய தொடர்புகள் யாவும் இம் முகுந்தன் என்ற தனிநபரோடு ஏற்படுத்திக்கொண்ட தொடர்பாகவே கணிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கழகத்தின் பெயரிலோ அல்லது கழகத்தின் செயலதிபர் என்ற உறவிலோ யாருடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாமென தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் தோழர் முகுந்தனை பணிக்கின்றது.

கடந்த காலத் தவறுகளை நிவர்த்தி செய்து தமிழ் பேசும் மக்களின் விடுதலையை வென்றெடுப்போமென இறுதிவரை எம் தாயகத்து மக்களுக்கு உறுதி கூறுகின்றோம்.

இவ்வண்ணம்.
மத்திய குழு உறுப்பினர்கள்.

1) தோழர் ஈஸ்வரன் (தள அமைப்புச் செயலர்)
2) தோழர் குமரன்
3) தோழர் அசோக்
4) தோழர் ராஜன்
5) தோழர் பாபுஜி
6) தோழர் முரளி
7) தோழர் ஆதவன்
8) தோழர் செந்தில்
9) தோழர் சேகர்

கழகத்தின் அனைத்து தொடர்புகளிற்கும்.

இல 3 ம் குறுக்குத் தெரு
வ.உ.சி. காலனி
வடபழனி
சென்னை-26
இந்தியா.

வெளியீடு: 23-7-1986

இம் முடிவை ஏற்றுச் செயற்படும் சுவிஸ் தமிழீழ மக்கள் விடுதலைக்கழக அமைப்புத் தோழர்கள்.

1) தோழர் இராசரத்தினம்.
2) தோழர் தாஸ்
3) தோழர் சுதாகரன்
4) தோழர் மனோகரன்
5) தோழர் ஞானலிங்கம்
6) தோழர் கருணாமூர்த்தி
7) தோழர் கனகலிங்கம்
8) தோழர் மூர்த்தி
9) தோழர் பிரதாபன்.

"அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறிவோம்."

P.L.O.T.
SWISS BRANCH

மறுபதிப்பு: தமிழீழமக்கள்விடுதலைக்கழக சுவிஸ் அமைப்பு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்